சாராம்சம்: இனிய குழந்தைகளே, பாபா, அதிகளவு ஆர்வத்துடன் உங்களுக்குக் கற்பிப்பதற்காக வந்துள்ளார். நீங்களும் அந்தளவு ஆர்வத்துடன் கற்க வேண்டும். கடவுளே உங்களுக்குக் கற்பிக்கின்றார் என்ற போதையைக் கொண்டிருங்கள்.

கேள்வி: பிரம்ம குமாரர்கள், குமாரிகளாகிய உங்களுடைய இலக்கும், நல்லாசிகளும் என்ன?

பதில்: 5000 வருடங்களுக்கு முன்னர், முன்னைய கல்பத்தில் நீங்கள் செய்ததை போன்று, அவ்வாறே ஸ்ரீமத்தைப் பின்பற்றி, மீண்டுமொரு முறை உலகில் சந்தோஷமும் அமைதியும் நிறைந்ததோர் இராச்சியத்தை ஸ்தாபிப்பதே உங்கள் இலக்காகும். முழு உலகமும் ஸ்ரீமத்தைப் பின்பற்றி சற்கதியடைய வேண்டும் என்பதே உங்கள் நல்லாசிகளாகும். நீங்கள் போதையுடன் கூறுகின்றீர்கள்: நாங்கள் அனைவருக்கும் சற்கதி அளிப்போம். நீங்கள் அமைதிக்கான பரிசைத் தந்தையிடமிருந்து பெறுகின்றீர்கள். நரகவாசிகளில் இருந்து சுவர்க்கவாசிகளாக மாறுவது என்பது பரிசைக் கோருவதாகும்.

ஓம் சாந்தி: மாணவர்கள் கற்கும்போது, சந்தோஷமாகக் கற்கின்றார்கள். அவர்களுடைய ஆசிரியர்களும் அதிகளவு சந்தோஷத்துடனும் ஆர்வத்துடனும் அவர்களுக்குக் கற்பிக்கின்றார்கள். எல்லையற்ற தந்தையும் ஆசிரியருமான அவரே எங்களுக்கு அதிகளவு ஆர்வத்துடன் கற்பிக்கின்றார் என்பதை ஆன்மீகக் குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். ஏனைய கல்விகளில், உங்கள் தந்தை உங்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியரிடமிருந்து வேறொருவராக இருக்கிறார். சில குழந்தைகளின் லௌகீகத் தந்தை அவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியராகவும் இருக்கின்றார். ஆகையால் அவர் அவர்களுக்கு அதிகளவு ஆர்வத்துடன் கற்பிப்பார், ஏனெனில் இரத்தத் தொடர்பும் உள்ளது. அவர் தனது குழந்தை என்பதை அறிந்திருப்பதால், அவர் மிகவும் ஆர்வத்துடன் அவருக்குக் கற்பிக்கின்றார். இந்தத் தந்தையும் உங்களுக்கு மிகவும் ஆர்வத்துடன் கற்பிக்கின்றார். ஆகவே குழந்தைகளாகிய நீங்களும் மிகவும் ஆர்வத்துடன் கற்கவேண்டும். தந்தை உங்களுக்கு நேரடியாகக் கற்பிக்கின்றரர். அவர் ஒரே ஒருமுறை உங்களுக்குக் கற்பிக்க வருகின்றார். கடவுளாகிய பாபா உங்களுக்குக் கற்பிக்கின்றார் என்பதால் குழந்தைகளாகிய நீங்கள் அதிகளவு ஆர்வம் கொண்டிருக்க வேண்டும். அவர் அனைத்தையும் மிகத்தெளிவாக விளங்கப்படுத்துகின்றார். சில குழந்தைகள் கற்கும்பொழுது, இவை அனைத்தும் எதனைப் பற்றியவை என அதிசயப்படுகின்றார்கள். இது நாடகத்தில் வருவதும் போவதுமான ஒரு சக்கரமாகும். ஆனால் அவர்கள் ஏன் இந்த நாடகம் உருவாக்கப்பட்டது? இதில் என்ன நன்மை உள்ளது? நாங்கள் எக்காலமும் தொடர்ந்தும் சுற்றி வரப் போகின்றோமா? அவ்வாறாயின் இந்தச் சக்கரத்தில் இருந்து விடுபடுவது நல்லது என்றும் நினைக்கிறார்கள். அவர்கள் இந்த 84 பிறவிகளின் சக்கரத்தைத் தொடர்ந்தும் சுற்றி வரவேண்டும் என்பதை பார்க்கையில், அவர்களுக்கு இத்தகைய எண்ணங்கள் உருவாகின்றன: எவருமே சக்கரத்தில் வருவதும் போவதிலும் இருந்து விடுதலை அடைய முடியாத

இத்தகைய நாடகத்தை ஏன் கடவுள் உருவாக்கினார். அநாதியான முக்தி (மோட்சம்) அடைவதே நல்லது. பல குழந்தைகளுக்கு அத்தகைய எண்ணங்கள் இருக்கின்றன. அவர்கள் வருவது போவதில் இருந்தும், சந்தோஷம், துன்பத்திலிருந்தும் விடுதலையடைய விரும்புகின்றார்கள். தந்தை கூறுகின்றார்: அது ஒருபோதும் அவ்வாறு இடம்பெற முடியாது. அநாதியான முக்தி அடைய முயற்சி செய்வது பயனற்றது. எந்தவோர் ஆத்மாவும் தனது பாகத்தில் இருந்து விடுதலை அடையமுடியாது எனத் தந்தை விளங்கப்படுத்துகின்றார். ஒவ்வொரு ஆத்மாவிலும், அழிவற்ற ஒரு பாகம் பதியப்பட்டுள்ளது. ஆத்மாக்கள் அநாதியானவர்களும், அழிவற்றவர்களும் ஆவர். நடிகர்;கள் முற்றிலும் மிகச்சரியானவர்கள். அங்கே ஓர் ஆத்மா அதிகமாகவோ அல்லது ஓர் ஆத்மா குறைவாகவோ இருக்க முடியாது. குழந்தைகளாகிய உங்களிடம் அனைத்து ஞானமும் உள்ளது. எவருமே இந்த நாடகத்தில் தனது பாகத்தை நடிக்காதிருக்கவோ அல்லது அநாதியான முக்தியை அடையவோ முடியாது. ஏனைய அனைத்துச் சமயத்தவர்களும் வரிசைக்கிரமமாக கீழிறங்கி வரவேண்டும். தந்தை விளங்கப்படுத்துகின்றார்: இது முன்பே நிச்சயிக்கப்பட்ட அநாதியான நாடகமாகும். நீங்களும் கூறுகின்றீர்கள்: பாபா, 84 பிறவிகளின் சக்கரத்தை நாங்கள் எவ்வாறு சுற்றி வருகின்றோம் என்பதை இப்போது நாங்கள் அறிவோம். முதலில் வருபவர்கள் 84 பிறவிகளை எடுக்கவேண்டும் என்பதனை இப்போது நீங்களும் புரிந்துகொள்கின்றீர்கள். தாமதமாக வருபவர்கள் நிச்சயமாகச் சில பிறவிகளையே எடுப்பார்கள். இங்கே நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். பழைய உலகம் நிச்சயமாகப் மீண்டும் புதியதாகப் போகின்றது. புதிய குழந்தைகள் தொடர்ந்தும் வந்து கொண்டிருப்பதால், பாபா மீண்டும், மீண்டும் உங்களுக்கு அனைத்தையும் விளங்கப்படுத்த வேண்டும் யார் அவர்களுக்கு முன்னைய பாடங்களைக் கற்பிப்பார்கள்? ஆகவே பாபா புதிய குழந்தைகளைக் கண்டதும், பழைய கருத்துக்களைத் திரும்பக் கூறுவார். இந்த ஞானம் முழுவதும் உங்கள் புத்தியில் உள்ளது. ஆரம்பத்தில் இருந்து உங்கள் பாகத்தை எவ்வாறு நடித்துள்ளீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் எவ்வாறு வரிசைக்கிரமமாகக் கீழிறங்கி வருகிறீர்கள் என்பதையும், எத்தனை பிறவிகள் எடுக்கிறீர்கள் என்பதையும் நீங்கள் மிகச்சரியாக அறிவீர்கள். தந்தை இந்த ஞான விடயங்களை உங்களுக்குக் கூறுவதற்காக இந்நேரத்தில் வந்துள்ளார். சத்திய யுகத்தில் நீங்கள் வெகுமதியைப் பெறுவீர்கள். இக்காலத்தில் மாத்திரமே இவை உங்களுக்கு விளங்கப்படுத்தப்படுகின்றன. கீதையின் ஆரம்பத்திலும், இறுதியிலும் ‘மன்மனாபவ’ என்னும் சொல் எழுதப்பட்டுள்ளது. உயர்ந்ததோர் அந்தஸ்தைப் பெறுவதற்காக உங்களுக்குக் கற்பிக்கப்படுகின்றது. இப்போது நீங்கள் அரசர் ஆகுவதற்காக முயற்சி செய்கின்றீர்கள். எவ்வாறு ஏனைய சமயத்தவர்களும் வரிசைக்கிரமமாகக் கீழிறங்கி வருவார்கள் என விளங்கப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் தங்கள் சமயத் தலைவர்களைப் பின்பற்ற வேண்டும். ஓர் இராச்சியம் என்ற கேள்வியே இல்லை. சமயநூலான கீதை பெருமளவு போற்றப்படுகின்றது. தந்தை பாரதத்தில் வந்து இதனைக் கூறுவதுடன் அனைவருக்கும் சற்கதி கொடுக்கின்றார். சமய ஸ்தாபகர்கள் மரணித்த பின்னர், அவர்களுக்கு மிகப்பெரிய யாத்திரீக ஸ்தலங்கள் கட்டப்படுகின்றன. எனினும், எல்லையற்ற தந்தை வருகின்ற பாரதமே அனைவரினதும் யாத்திரீக ஸ்தலமாகும். தந்தை பாரதத்தில் பிரவேசித்து அனைவருக்கும் சற்கதியை கொடுக்கிறார். அவர் கூறுகின்றார்: நீங்கள் என்னை

முக்தி அளிப்பவரும், வழிகாட்டியும் என அழைக்கின்றீர்கள், அப்படியல்லவா? நான் உங்களை இந்தத் துன்பமான பழைய உலகிலிருந்து விடுதலை செய்து அமைதி தாமத்திற்கும், அந்த சந்தோஷதாமத்திற்கும். உங்களை அழைத்துச் செல்வேன். பாபா எங்களை அமைதி தாமத்திற்கும், சந்தோஷ தாமத்திற்கும் அழைத்துச் செல்வார் என்றும், ஏனைய அனைவரும் அமைதி தாமத்திற்குச் செல்வார்கள் என்றும் குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். தந்தை வந்து துன்பத்திலிருந்து உங்களை விடுதலை செய்கின்றார். அவர் பிறப்பதோ, மரணிப்பதோ இல்லை. தந்தை வந்து பின்னர் மீண்டும் பிரிந்து செல்வார். நீங்கள் அவர் மரணித்துவிட்டார் என்றோ, அல்லது அவர் சரீரத்தை விட்டு நீங்கிவிட்டார் எனச் சிவானந்தாவையிட்டுக் கூறுவதைப் போன்று தந்தையையிட்டுக் கூறுவதில்லை. ஓர் ஆத்மா வெளியேறியதும் மக்கள் இறுதிக் கிரியைகளைச் செய்வார்கள். இந்தத் தந்தை வெளியேறும்போது எந்தக் கிரியைகளோ சடங்குகளோ செய்யப்படுவதில்லை. அவர் எப்போது வருவார் என்பதையும் கூறமுடியாது. இறுதிக் கிரியைகள் செய்வது என்ற கேள்விக்கே இடமில்லை. அனைத்து மனிதர்களுக்கும் இறுதிக் கிரியைகள் இடம்பெறும். ஆனால் தந்தைக்கு இறுதிக் கிரியைகள் இடம்பெறுவதில்லை. ஏனெனில் அவருக்கு ஒரு சரீரம் இல்லை. சத்தியயுகத்தில் ஆன்மிக ஞானமோ அல்லது வழிபாடோ குறிப்பிடப்படுவதில்லை. இந்தக் காலத்திலேயே அத்தகைய விடயங்கள் உள்ளன. ஏனையவர்கள் இக்காலத்தில் பக்தியை மாத்திரம் கற்பிக்கின்றார்கள். அரைக்கல்பத்திற்கு அங்கே பக்தியிருக்கும். பின்னர் சக்கரத்தின் இறுதியில் தந்தை வந்து உங்கள் ஆஸ்தியான இந்த ஞானத்தை உங்களுக்குக் கொடுக்கின்றார். இந்த ஞானம் உங்களுடன் அங்கு செல்லப் போவதில்லை. அங்கு தந்தையை நினைவு செய்யத் தேவையில்லை. ஏனெனில் நீங்கள் விடுதலையாகி உள்ளீர்கள். அங்கு நீங்கள் அவரை நினைவு செய்ய வேண்டுமா? அங்கே துன்பம் பற்றிய முறைப்பாடு இருக்க மாட்டாது. பக்தி முதலில் கலப்படமற்றதாகவும் அதன் பின்னர் அது கலப்படமாகவும் ஆகிவிட்டது. இக்காலத்தில் பக்தி பெருமளவு கலப்படம் உள்ளதாக உள்ளது. இதுவே ஆழ்நரகம் என அழைக்கப்படுகிறது. இது முழுமையான நரகமாகும். தந்தை அதனை முழுமையான சுவர்க்கம் ஆக்குவதற்கு இப்போது வந்துள்ளார். இந்நேரத்தில் 100சதவீதம் துன்பம் உள்ளது. பின்னர் அங்கு 100சதவீதம் அமைதியும், சந்தோஷமும் இருக்கும். ஆத்மாக்கள் அங்கு சென்று தமது வீட்டில் ஓய்வு எடுப்பார்கள். இதனை விளங்கப்படுத்துவது மிகவும் இலகுவானதாகும். தந்தை கூறுகின்றார்: பழைய உலகம் அழிக்கப்பட்டு, புதிய உலகம் ஸ்தாபிக்கப்படும் போது, மாத்திரமே நான் வருவேன். அத்தகைய பணியை ஒரேயொருவர் செய்கின்றார் என்றில்லை. பல உதவியாளர்களும் தேவைப்படுகின்றார்கள். இந்தக் காலத்திலேயே குழந்தைகளாகிய நீங்கள் தந்தையின் உதவியாளர்கள் ஆகுகின்றீர்கள். நீங்கள் உண்மையில் குறிப்பாகப் பாரதத்திற்குச் சேவை செய்கின்றீர்கள். சத்தியமான தந்தை உங்களுக்கு உண்மையான சேவையைக் கற்பிக்கின்றார். நீங்கள் உங்களுக்கும், பாரதத்திற்கும் அத்துடன் முழு உலகிற்குமே நன்மை செய்கின்றீர்கள். ஆகவே நீங்கள் இதனைப் பெருமளவு ஆர்வத்துடன் செய்யவேண்டும். பாபா பெருமளவு ஆர்வத்துடன் அனைவருக்கும் சற்கதி அளிக்கின்றார். இப்போதும் அனைவரும் நிச்சயமாக சற்கதியை பெறவேண்டும். இதுவே தூய பெருமையும், நல்லாசிகளும் ஆகும். நீங்கள் உண்மையான சேவையை செய்கின்றீர்கள். ஆனால் மறைமுகமான வழியில் செய்கிறீர்கள். ஓர் ஆத்மா, சரீரத்தினால்

அனைத்தையும் செய்கின்றார். பிரம்ம குமாரிகளின் இலக்கு என்ன என மக்கள் பலர் உங்களிடம் கேட்கின்றார்கள். அவர்களிடம் கூறுங்கள்: பிரம்மகுமாரிகளின் இலக்கு, அமைதியும், சந்தோஷமும் உள்ள சத்தியயுக சுய இராச்சியத்தை முழு உலகிலும் ஸ்தாபிப்பதாகும். ஒவ்வொரு 5000 வருடமும் நாங்கள் ஸ்ரீமத்தைப் பின்பற்றி உலகில் அமைதியை ஸ்தாபித்து, உலகின் அமைதிப் பரிசைப் பெறுகின்றோம். அரசன், அரசி, பிரஜைகள் அனைவருமே இந்தப் பரிசைப் பெறுகின்றார்கள். நரகவாசியில் இருந்து சுவர்க்கவாசி ஆகுவது ஒரு சிறிய பரிசு அல்ல. அந்த மக்கள் அமைதிப்பரிசைப் பெறும்போது பெருமளவு சந்தோஷம் அடைகின்றார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் எதனையுமே பெறுவதில்லை. நாங்களே இந்த நேரத்தில் உண்மையான பரிசான உலக இராச்சியத்தைத் தந்தையிடம் இருந்து பெறுகின்றோம். அவர்கள் பாரதம் தங்கள் மேன்மையான பூமி எனக் கூறுகின்றார்கள். அவர்கள் பாரதத்தைப் பெருமளவு புகழ்கின்றார்கள். தாம் பாரதத்தின் அதிபதிகள் என அனைவரும் நம்புகின்றார்கள். எனினும் அவர்கள் அதிபதிகள் அல்ல. குழந்தைகளாகிய நீங்கள் இப்போது பாபாவின் ஸ்ரீமத்தைப் பின்பற்றி இராச்சியத்தை ஸ்தாபிக்கின்றீர்கள். எந்தவிதமான ஆயுதங்கள் போன்றவையும் உங்களிடம் இல்லை. நீங்கள் தெய்வீகக் குணங்களைக் கிரகிக்கின்றீர்கள். இதனாலேயே நீங்கள் நினைவு செய்யப்பட்டு, வழிபடப்படுகின்றீர்கள். அம்பாள் எந்தளவிற்கு வழிபடப்படுகிறார் எனப் பாருங்கள், எவ்வாறாயினும் யார் அம்பாள்? அவர் பிராமணரா அல்லது ஒரு தேவரா என்பதுவும் அவர்களுக்குத் தெரியாது. அம்பாள், காளி, துர்க்கை, சரஸ்வதி போன்ற பல பெயர்கள் உள்ளன. இங்கேயும் அம்பாளுக்கு ஒரு சிறிய ஆலயம் உண்டு. அவர்கள் அம்பாளைப் பல கரங்களுடன் காண்பிக்கின்றார்கள். ஆனால் அவர் அவ்வாறு இல்லை. அது ஒரு குருட்டு நம்பிக்கை எனப்படுகின்றது. கிறிஸ்து, புத்தர் போன்றவர்கள் வந்து அவர்களுடைய சொந்தச் சமயங்களை ஸ்தாபித்தார்கள். அவர்களுடைய நேரம், திகதி அனைத்தையும் அறிவோம். அங்கே குருட்டு நம்பிக்கை என்ற கேள்விக்கே இடமில்லை. இங்கே பாரதவாசிகளுக்கு அவர்களின் சமயத்தை யார் ஸ்தாபித்தார்கள், அது எப்போது ஸ்தாபிக்கப்பட்டது என்பதைப் பற்றி எதுவுமே தெரியாது. இதனாலேயே அது குருட்டு நம்பிக்கை எனக் கூறப்படுகின்றது. இப்போது நீங்கள் பக்தர்கள், பின்னர் நீங்கள் வழிபடத் தகுதிவாய்ந்தவர்கள் ஆகுவீர்கள். ஆத்மாக்களாகிய நீங்கள் வழிபடத் தகுதி வாய்ந்தவர்கள் ஆகும்போது உங்கள் சரீரமும் அவ்வாறாகும். நீங்கள் ஆத்ம வடிவில் வழிபாடு செய்யப்படுகிறீர்கள், பின்னர் நீங்கள் தேவர்கள் ஆகுவதால், நீங்கள் அந்த வடிவங்களிலும் வழிபாடு செய்யப்படுகிறீர்கள். தந்தை எப்போதும் அசரீரியாக இருப்பதால், அவர் எப்போதும் வழிபடத் தகுதி வாய்ந்தவர். அவர் என்றுமே வழிபாடு செய்பவர் ஆகுவதில்லை. குழந்தைகளாகிய உங்களையிட்டே கூறப்பட்டுள்ளது: நீங்கள் வழிபாடு செய்யத் தகுதி வாய்ந்தவர்களும், வழிபாடு செய்பவர்களும் ஆவீர்கள். தந்தை என்றுமே வழிபாடு செய்யத் தகுதி வாய்ந்தவர். தந்தை இங்கு வந்து, அனைவருக்கும் சற்கதி வழங்குகின்ற உண்மையான சேவையைச் செய்கின்றார். தந்தை கூறுகின்றார்: இப்பொழுது தொடர்ந்தும் என்னை மாத்திரம் நினைவு செய்யுங்கள். எந்தச் சரீரதாரிகளையும் நினைவு செய்யாதீர்கள். பல கோடீஸ்வரர்களும், கோடானு கோடீஸ்வரர்களும் சென்று அல்லாவின் பெயரை அழைக்கின்றார்கள். அதிகளவு குருட்டு நம்பிக்கையுள்ளது. தந்தை 'ஹம்சோ' (நான் எதுவோ அதுவே ஆகுகின்றேன்) என்பதன் கருத்தையும்

விளங்கப்படுத்தியுள்ளார். அவர்கள் கூறுகின்றார்கள்: சிவோஹம் (ஆத்மாவாகிய நானே பரமாத்மா) இப்பொழுது தந்தை உங்களுக்குச் சரியானது என்ன என்பதைக் கூறுகின்றார். ஆகவே பக்தி மார்க்கத்தில் நீங்கள் கேட்ட விடயங்கள் சரியா அல்லது பாபா கூறியவை சரியா என நீங்களே தீர்மானியுங்கள். 'ஹம்சோ' என்பதற்கான அவர்களின் விளக்கம் மிகவும் நீண்டதும், குழப்பமானதும் ஆகும். நாங்கள் பிராமணர்கள், பின்னர் நாங்கள் தேவர்களாகி, சத்திரியர்களாகி.... எனவே 'ஹம்சோ' என்பதன் எந்தக் கருத்து சரியானது? இவ்வாறே ஆத்மாவாகிய நான் சக்கரத்தைச் சுற்றி வருகிறேன். பல்ரூப வடிவங்களைக் கொண்ட படமும் உள்ளது. அவர்கள் உச்சிக்குடுமிகளான பிராமணர்களை இந்தப்படத்தில் காட்டவும் இல்லை. தந்தையையும் கூடக் காட்டவில்லை. தேவர்கள் எங்கிருந்து வந்தார்கள்? அவர்கள் எவ்வாறு உருவாக்கப்பட்டார்கள்? கலியுகத்தில் சூத்திரரின் குலம் உள்ளது. ஆகவே எவ்வாறு தேவகுலம் சத்தியயுகத்தில், திடீரெனத் தோன்றியது? அவர்களுக்கு எதுவுமே தெரியாது. மக்கள் பக்தி மார்க்கத்தில் அதிகளவு சிக்குண்டு விட்டார்கள். சிலர் கிராந்தைக் கற்றதுடன் ஓர் ஆலயம் கட்டுகின்ற எண்ணத்தையும் கொண்டிருந்தார்கள். ஆதலால் அவர்கள் அதனைச் செய்ததுடன், அங்கிருந்து கிராந்தை உரைத்தார்கள். பலர் அங்கு சென்று, பின்பற்றுபவர்;கள் ஆகிவிட்டார்கள். எனினும் அதில் எவ்விதப் பயனும் இல்லை. பல கடைகள் தோன்றின. அந்தக் கடைகள் யாவும் இப்பொழுது அழிக்கப்பட்டுவிடும். அவ்வாறான வியாபாரம் அனைத்தும் பக்தி மார்க்கத்தில் இருக்கின்றன. அவர்கள் அதனூடாக பெருந் தொகையான பணத்தை ஈட்டுகிறார்கள். சந்நியாசிகள் தாங்கள் பிரம்மயோகிகள் (பிரம்ம தத்துவத்துடன் யோகம் செய்பவர்கள்) எனக் கூறுகின்றார்கள். ஆதியில் பாரத மக்கள் தேவதர்மத்திற்கு உரியவர்கள் எனக் கூறினாலும் தாங்கள் இந்து சமயத்துக்குரியவர்கள் எனக் கூறுகிறார்கள். அதேபோன்று, பிரம்மம் என்பது ஆத்மாக்கள் வாழும் ஒளித் தத்துவமாகும். ஆனால், சந்நியாசிகள் தமக்கு கொடுத்துள்ள பெயர்: "பிரம்ம தத்துவத்தின் ஞானத்தை உடையவர்கள்‖ எவ்வாறாயினும், பிரம்மதத்துவம் ஆத்மாக்களின் வசிப்பிடமாகும். ஆகவே அவர்கள் அத்தகைய ஒரு பெரிய தவறை எவ்வாறு செய்தார்கள் எனத் தந்தை விளங்கப்படுத்துகின்றார். அவை அனைத்துமே அவர்களின் மாயையாகும். அவர்களது மாயை அனைத்தையும் நீக்குவதற்கே நான் வந்துள்ளேன். பக்தி மார்க்கத்தில் அவர்கள் கூறுகின்றார்கள்: ஓ கடவுளே! நீங்கள் முக்தியளிக்கும் முறையும், வழிகாட்டல்களைக் கொடுப்பதுவும் முற்றிலும் தனித்துவமானவை! வேறு எவராலும் முக்தியளிக்க முடியாது. எனினும் அவர்கள் பலரிடமிருந்தும் வழிகாட்டல்களைப் பெறுகின்றார்கள். இங்கு நீங்கள் பெறும் வழிகாட்டல்கள் பெரியதோர் அற்புதத்தைப் புரியும். இந்த வழிகாட்டல்கள் முழு உலகினையும் முற்றிலுமாக மாற்றிவிடும். இப்போது குழந்தைகளாகிய உங்கள் புத்தி, எவ்வாறு பல சமயங்கள் இருக்கின்றன என்பதைப் புரிந்து கொள்கின்றது. பின்னர், ஆத்மாக்கள் தங்கள் சொந்தப் பகுதிகளுக்குச் சென்று வசிப்பார்கள். இவை அனைத்தும் நாடகத்தில் நிச்சயிக்கப்பட்டுள்ளன. தந்தை ஒருவரே தெய்வீகக் காட்சிகளை அருள்;பவர் என்பதைக் குழந்தைகளாகிய நீங்களும் அறிவீர்கள். ஒருவர் பாபாவிடம் கூறினார்: நான் எவருக்கேனும் தெய்வீகக் காட்சியளிப்பதற்கு, எனக்குத் தெய்வீகக் காட்சிகளின் திறவுகோலைத் தாருங்கள். பாபா பதிலளித்தார்: இல்லை. எவருக்கும் இந்தத் திறவுகோல் கொடுக்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாக, நான் உங்களுக்கு உலக

இராச்சியத்தை அளிக்கின்றேன். நான் அதனைப் பெறுவதில்லை. காட்சிகளை அருளும் பாகம் என்னுடைய பாகமே. ஒருவருக்கு ஒரு காட்சி கிடைக்கும்போது, அதனால் எந்தப் பயனும் இல்லாத போதிலும் மிகவும் சந்தோஷமடைகிறார். ஒருவருக்கு ஒரு காட்சி கிடைப்பதால், அவர் நோயிலிருந்து விடுபடுவார் என்றோ, அல்லது அவர் செல்வந்தராகுவார் என்றோ இல்லை, இல்லை, மீராவுக்குக் காட்சி கிடைத்தது, ஆனால் அவர் முக்தியடையவில்லை. அவர் வைகுந்தத்தில் வாழ்கிறார் என மக்கள் நினைக்கின்றார்கள். எவ்வாறாயினும், கிருஷ்ணரின் தேசமான வைகுந்தம் எங்கேயுள்ளது? அந்த விடயங்கள் அனைத்தும் காட்சிகள் மாத்திரமே. தந்தை இங்கு அமர்ந்திருந்து அனைத்து விடயங்களையும் விளங்கப்படுத்துகிறார். முதலில் இவரும் விஷ்ணுவின் காட்சிகளைக் கண்டு மிகவும் சந்தோஷமடைந்தார். அவர் தான் சக்கரவர்த்தியாகப் போவதைக் கண்டதுடன், விநாசத்தின் காட்சிகளையும், பின்னர் அவருடைய இராச்சியத்தின் காட்சிகளையும் கண்டார். எனவே அவர் உலகின் அதிபதியாகப் போகின்றார் என்ற நம்பிக்கை அவரில் உறுதியாகியது. பின்னர் பாபா அவரில் பிரவேசித்தார்;. ~~நல்லது பாபா இவை அனைத்தையும் நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். எனக்கு உலக இராச்சியம் மாத்திரமே வேண்டும்".; நீங்களும் இந்தப் பேரம் பேச வந்துள்ளீர்கள். அப்படியல்லவா? ஞானத்தைப் பெறுபவர்கள் பக்தி செய்வதை நிறுத்திவிடுவார்;கள். அச்சா.

இனிமையிலும் இனிமையான, அன்புக்குரிய, எப்போதோ தொலைந்து இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளுக்கு உங்கள் தாய், தந்தையாக இருக்கும் பாப்தாதாவின் அன்பும் நினைவுகளும் காலை வந்தனங்களும். ஆன்மீகத் தந்தை ஆன்மீகக் குழந்தைகளுக்கு நமஸ்தே சொல்கிறார்.

தாரணைக்கான சாராம்சம்:

1. தெய்வீகக் குணங்களைக் கிரகித்து, ஸ்ரீமத்தைப் பின்பற்றி பாரதத்திற்கு உண்மையான சேவை செய்யுங்கள். உங்களுக்கும், பாரதத்திற்கும், உலகிற்கும் பெருமளவு ஆர்வத்துடன் நன்மை செய்யுங்கள்.
2. அநாதியான, அழிவற்ற ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட நாடகத்தை மிகச்சரியாகப் புரிந்து கொள்வதுடன், உங்கள் நேரத்தை வீணாக்குகின்ற எந்த முயற்சியையும் செய்யாதீர்கள். வீணான எண்ணங்களையேனும் கொண்டிராதீர்கள்.

ஆசீர்வாதம்: சதா அமரத்துவமானவராக இருந்து, தீபராஜ் தந்தையிடமிருந்து அமரஜோதி என்ற வாழ்த்துக்களை பெற்றுக் கொள்வீர்களாக.

உயிருள்ள தீபங்களான உங்களின் ஞாபகார்த்தமாகவே பக்தர்கள் உயிரற்ற தீப ஒளிகளை மாலையாக்கிக் கொண்டாடுகிறார்கள். ஏற்றப்பட்ட உயிருள்ள தீபங்களான நீங்கள், குழந்தைகள் ஆகி, தீபங்களின் அதிபதியானவருடன் மங்களகரமானதொரு சந்திப்பைக் கொண்டாடுகிறீர்கள். பாப்தாதா குழந்தைகளாகிய உங்கள் ஒவ்வொருவரின் நெற்றியிலும் ஏற்றப்பட்ட தீபத்தை பார்க்கின்றார். அமரஜோதி வடிவமான, அழியாத குழந்தைகளான நீங்கள் தீபராஜ் தந்தையிடமிருந்து வாழ்த்துக்களை பெறுவதுடன், அமரராக இருப்பதற்கான ஆசீர்வாதங்களையும் பெறுகிறீர்கள். தீபராஜாவினதும் தீபராணிகளினதும் சந்திப்பின் ஞாபகார்த்தமே தீபாவளியாகும்.

சுலோகம்: எந்தவொரு மூன்றாம் மனிதராலும் உங்களை பிரிக்க முடியாதளவிற்கு ~~நானும் தந்தையும்|| இணைந்திருப்போம்.

**---**ஓம் சாந்தி**---**

அவ்யக்த சமிக்ஞை**:** யோக சக்திகளுடன் உங்கள் மனதால் உங்களுடனும் மற்றவர்களுடனும் பரிசோதனை செய்யுங்கள்**.**

தற்காலத்திற்கு ஏற்ப, ஆத்மாக்கள் அனைவரும் உடனடிப்பலனை அதாவது, ஏதாவது ஒரு நடைமுறை அத்தாட்சியை காணவே விரும்புகிறார்கள். எனவே, உங்கள் சரீரம், மனம், செயல்கள், உறவுமுறைகள் தொடர்புகள் மீது உங்களுடைய மௌனசக்தியை பிரயோகித்து பாருங்கள். உங்களுடைய மௌனசக்தியை பயன்படுத்துவதன் மூலம் உங்கள் எண்ணங்களால் எந்த ஓர் ஆத்மாவிடமும், வயர்லெஸ்ஸை (கம்பியில்லா இணைப்பை) விட வேகமாக உங்களால் சென்றடைய முடியும். தூய எண்ணங்களே இந்த சக்திக்கான விசேட ஆயுதமாகும். இந்த எண்ணங்கள் என்ற ஆயுதத்தால், நீங்கள் எது நடக்க வேண்டும் என விரும்புகிறீர்களோ அதனை நடைமுறையில் காண்பீர்கள்.

----ஓம் சாந்தி----